**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 56** **நாள்: 18.04.2024**

**மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கும் வகையில் சென்னை மாவட்டத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச வாகன வசதிகளைப் பெற Saksham App மூலமாகவும், மாவட்ட தகவல் மையத் தொடர்பு எண் 1950 அல்லது மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுபாட்டு அறை எண் 1800-425-7012 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பயனடையலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 18வது மக்களவைக்கான பொதுத்தேர்தல்கள் 2024ஆனது தமிழ்நாட்டில் நாளை (19.04.2024) ஒரேகட்டமாக நடைபெறவுள்ளது. சென்னை மாவட்டத்தில் 3 நாடாளுமன்றத் தொகுதிகளில் 3726 வாக்குச்சாவடி மையங்களிலும் நாளை தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்காக மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு, அவர்கள் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்கும் வகையில் இலவச வாகன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக UBER நிறுவனத்தின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் இலவச வாகன சேவையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் மாற்றுத்திறனாளிகள் Saksham App மூலமாகவும், மாவட்ட தகவல் மையத் தொடர்பு எண் 1950 அல்லது மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுபாட்டு அறை எண் 1800-425-7012 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

மேலும், மாற்றுத்திறனாளி (Hearing Impaired) வாக்காளர்களின் உதவிக்காக ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒருவர் என்ற வீதத்தில் சைகை மொழி தெரிந்த மூன்று அலுவலர்கள் மாவட்ட தேர்தல் அலுவலக கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, மாற்றுத்திறனாளி (Hearing Impaired) வாக்காளர்கள் 91501 95275 என்ற வாட்ஸ்ஆப் எண்ணை தொடர்பு கொண்டு பயனடையுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**